# கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், கே.ஆர்.நகர், கோவில்பட்டி

## லட்சுமி அம்மாள் நினைவு பதினொன்றாவது அகில இந்திய ஹாக்கி போட்டி - 2019

**கோவில்பட்டி மே 20, 2019**

20.05.2019 (திங்கட்கிழமை) நடைபெற்ற பதினொன்றாவது லட்சுமி அம்மாள் நினைவு கோப்பை அகில இந்திய ஹாக்கி போட்டி குறித்த செய்திகள்.

**13வது லீக் ஆட்டம்:** சென்னை சாய் அணி மற்றும் சென்னை இந்தியன் வங்கி.

கோவில்பட்டி, கே.ஆர்.மருத்துவம் மற்றும் கல்வி அறக்கட்டளையின் சார்பில், கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து நடத்தும் பதினொன்றாம் ஆண்டு லட்சுமி அம்மாள் நினைவு சுழற் கோப்பைக்கான அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் மே 16ம் தேதி முதல் மே 26ம் தேதி வரை கோவில்பட்டி செயற்கை புல்வெளி மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக மின்னொளியில் நடைபெற்று வருகிறது.

**போட்டியின் 5வது நாளான இன்று காலை 6.30 மணிக்கு நடைபெற்ற 13வது லீக் ஆட்டத்தில் சென்னை சாய் அணியுடன் சென்னை இந்தியன் வங்கி அணி மோதியது.**

**இதில் 3:2 என்ற கோல் கணக்கில் சென்னை சாய் அணி வெற்றி பெற்றது.**

1-வது நிமிடத்தில் சென்னை இந்தியன் வங்கி அணி வீரர் ஹரிஷ் எஸ் முதாகர் ஒரு பீல்டு கோல் போட்டார்.

3-வது நிமிடத்தில் சென்னை சாய் அணி வீரர் இளம்பாரி பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

5-வது நிமிடத்தில் சென்னை சாய் அணி வீரர் முத்து ஒரு பீல்டு கோல் போட்டார்.

14-வது நிமிடத்தில் சென்னை சாய் அணி வீரர் சண்முகவேல் ஒரு பீல்டு கோல் போட்டார்.

45-வது நிமிடத்தில் சென்னை இந்தியன் வங்கி அணி வீரர் வினோதன் பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

திரு. ராஜ்குமார் ஜா மற்றும் திரு. கீர்த்தி முத்தப்பா ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **தினேஷ்ராஜா,** சாய், சென்னை.

(Refer Photo - LASA2019_20052019_LEAGUE_13_Photo)

**14வது லீக் ஆட்டத்தில் புனே பிஇஜி & சென்டர் கிர்கீ ஹாக்கி அணியுடன் கர்நாடகா ஹாக்கி கூர்க் அணி மாலை 4.30 மணியளவில் மோதியது.**

**இதில் 2:1 என்ற கோல் கணக்கில் கர்நாடகா ஹாக்கி கூர்க் அணி வெற்றி பெற்றது.**

43-வது நிமிடத்தில் கர்நாடகா ஹாக்கி கூர்க் அணி வீரர் சமந்த் ஒரு பீல்டு கோல் போட்டார்.

46-வது நிமிடத்தில் புனே பிஇஜி & சென்டர் கிர்கீ ஹாக்கி வீரர் ஆலிசன் மோத் ஒரு பீல்டு கோல் போட்டார்.

53-வது நிமிடத்தில் கர்நாடகா ஹாக்கி கூர்க் அணி வீரர் பளங்கப்பா பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

திரு. அமித் ஷையினி மற்றும் திரு. மல்ஹைட் சிங் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **பளங்கப்பா,** ஹாக்கி கூர்க், கர்நாடகா.

(Refer Photo - LASA2019_20052019_LEAGUE_14_Photo)

**15வது லீக் ஆட்டத்தில் மும்பை யூனியன் வங்கி அணியுடன் நியூடெல்லி நேஷனல் ஹாக்கி அகாடமி அணி மாலை 6.15 மணியளவில் மோதியது.**

**இதில் 1:1 என்ற கோல் கணக்கில் மும்பை யூனியன் வங்கி அணியும் நியூடெல்லி நேஷனல் ஹாக்கி அகாடமி அணியும் சமநிலைப் பெற்றது.**

41-வது நிமிடத்தில் நியூடெல்லி நேஷனல் ஹாக்கி அகாடமி அணி வீரர் பங்கஜ் ஒரு பீல்டு கோல் போட்டார்.

46-வது நிமிடத்தில் மும்பை யூனியன் வங்கி அணி வீரர் பிரின்ஸ் சார்ஷியா ஒரு பீல்டு கோல் போட்டார்.

திரு. ஷாகில் அகமது மற்றும் திரு. ராஜ்குமார் ஜா ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **ரஷாட் மின்ஸ்,** நேஷனல் ஹாக்கி அகாடமி, நியூடெல்லி.

(Refer Photo - LASA2019_20052019_LEAGUE_15_Photo)

**மேலும் 16வது லீக் ஆட்டத்தில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே அணியுடன் சென்னை தமிழ்நாடு போலீஸ் அணி இரவு 8.00 மணியளவில் மோதியது.**

**இதில் 3:1 என்ற கோல் கணக்கில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே அணி வெற்றி பெற்றது.**

2-வது நிமிடத்தில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே அணி வீரர் மங்கரா பெங்கரா பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

14-வது நிமிடத்தில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே அணி வீரர் சுபாத் டிர்க்கி ஒரு பீல்டு கோல் போட்டார்.

56-வது நிமிடத்தில் சென்னை தமிழ்நாடு போலீஸ் அணி வீரர் சௌந்திரபாண்டியன் ஒரு பீல்டு கோல் போட்டார்.

56-வது நிமிடத்தில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே அணி வீரர் மங்கரா பெங்கரா பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

திரு. கீர்த்தி முத்தப்பா மற்றும் திரு. சுரேஷ்குமார் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **மங்கரா பெங்கரா,** ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே, புவனேஷ்வர்.

(Refer Photo - LASA2019_20052019_LEAGUE_16_Photo)

**நாளை 21.05.2019 (செவ்வாய்கிழமை) நடைபெறும் போட்டிகள்:**

| வ.எண். | நேரம் | அணி - 1 | அணி - 2 |
|---|---|---|---|
| 1 | 6.30 am | ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி, மும்பை | சாய், சென்னை |
| 2 | 4.30 pm | சிஜஎஸ்எப், சண்டிகர் | தமிழ்நாடு போலீஸ், சென்னை |
| 3 | 6.15 pm | சவுத் சென்ட்ரல் இரயில்வே, செகந்திரபாத் | பிஇஜி & சென்டர் கிர்கி ஹாக்கி, புனே |
| 4 | 8.00 pm | ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே, புவனேஷ்வர் | கனரா வங்கி, பெங்களூர் |